மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
க.பொ.த (உ/தர)ப் பரீட்சை, மூன்றாம் தவணை – 2026

அரசியல் விஞ்ஞானம்
Political Science I, II

மூன்று மணித்தியாலம்
10 நிமிடம்

23 | **T** | **I, II**

தரம் - 12 (2027)

சுட்டெண்:.....

பகுதி – I(A)

❖ **1 தொடக்கம் 10 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அந்த இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01. அரசியல் என்பது
(1) அரசு மற்றும் அரசாங்கம் தொடர்பான கற்கையாகும்.
(2) வன்முறை வழிமுறையை மாத்திரம் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும்.
(3) அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும்.
(4) அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரயோக ரீதியான செயற்பாடாகும்.
(5) பிரசைகளை அடிமைப்படுத்தி அடக்கி ஆளும் செயற்பாடாகும். (.....)

02. அரசியல் விஞ்ஞானம்
(1) இயற்கை விஞ்ஞானத்தின் ஒரு கற்கைப் பகுதியாகக் காணப்படுகின்றது.
(2) தெளிவான பாடப்பரப்பொன்றைக் கொண்டிருக்காத கற்கைத் துறையாகும்.
(3) அரசியலை அறிவியலின் அடிப்படையில் ஆராயும் கற்கைத் துறையாகும்.
(4) சமூகங்களுக்கிடையில் முரண்பாட்டை வளர்க்கும் கற்கைத் துறையாகக் கருதப்படுகின்றது.
(5) மிகவும் குறுகிய கால வரலாற்றைக் கொண்ட கற்கைத் துறையாகும். (.....)

03. அரசியலைக் கற்பதற்கான தத்துவார்த்த அணுகுமுறை தொடர்பான முக்கியமான சிந்தனையாளர்களில் அடங்குவோர்
(1) பிளேட்டோ, அரிஸ்டோட்டில், சிசரோ, மகாத்மாகாந்தி
(2) ஆல்மண்ட், கோல்மன், லிப்சட், சிட்னி வெப்பர்
(3) எடம்ஸ்மித், டேவிட் ரிக்காடோ, ஜோன்ஸ்வாட்மில், தோமஸ் மெல்தஸ்
(4) ஆகஸ்ட் கொம்டே, மெக்ஸ்வெபர், டேவிட் ஹெல்ட், பெட்ரிக் ஏங்கெல்ஸ்
(5) ஜீன்போடின், ஜோன் ஒஸ்டின், ரூசோ, மொண்டஸ்கியூ (.....)

04. அரசு என்பது
(1) அரசாங்கத்தின் ஒரு கூறாகும்.
(2) காலத்துக்குக் காலம் மாற்றமடையக் கூடிய நிறுவனமாகும்.
(3) சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தும் நிறுவனமாகும்.
(4) விருப்பத்துக்குரியவர்களை மட்டும் உறுப்பினர்களாக்கிக் கொள்ளும் நிறுவனமாகும்.
(5) அரசியல் அதிகாரத்தின் ஏக நிறுவனமாகும். (.....)

Past Papers Wiki

05. இறைமையானது
(1) இலகுவில் பிரிக்கப்படக்கூடியது.
(2) கூட்டாட்சி அரசுகளில் மத்தியமயப்படுத்தப்பட்டுக் காணப்படும்.
(3) அரசுகள் மட்டுமே அனுபவிக்கின்ற அதிகாரமாகும்.
(4) அரசொன்று தனது ஆள்புல எல்லைக்கு அப்பாலும் அதிகாரம் செலுத்துவதற்கான இயலுமையை வழங்குகின்றது.
(5) நவீன அரசுகள் அனைத்தும் பூரண இறைமை அதிகாரத்தை தங்கு தடையின்றி அனுபவிக்கின்றன. (.....)

06. சனாதிபதி அரசாங்க முறையின் பிரதான பண்புகளில் ஒன்றாவது
(1) உலகின் பெரும்பாலான நாடுகளில் நடைமுறையிலிருக்கும் அரசாங்க முறையாகும்.
(2) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை என்பன தனித்தனியான தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுகின்றன.
(3) அரசாங்கத்தின் தலைவராக பிரதம மந்திரி காணப்படுவார்.
(4) நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.
(5) சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் பதவிக் காலம் சமகாலத்தில் முடிவுக்கு வரும். (.....)

07. பின்வரும் அரசியல் சிந்தனையாளர்களுள் 'அதிகார வேறாக்கம்' தொடர்பான கோட்பாட்டை முன்வைத்த சிந்தனையாளர் யார்?
(1) தோமஸ் ஹொப்ஸ் (2) ஜோன்லொக் (3) மொண்டஸ்கியூ
(4) ஜீன் ஜெக்ருசோ (5) கார்ல்மாக்ஸ் (.....)

08. தாராள ஜனநாயக அரசு மாதிரி
(1) தனிமனித சுதந்திரத்தை நிராகரிக்கின்றது.
(2) தனிக்கட்சி ஆட்சிமுறையை ஆதரிக்கின்றது.
(3) சமதர்மப் பொருளாதார முறையை ஊக்குவிக்கின்றது.
(4) வர்க்க பேதமற்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டது.
(5) மக்கள் ஆட்சி தொடர்பான எண்ணக்கருவை முதன்மைப்படுத்துகின்றது. (.....)

09. குடியரசு வாதம்
(1) 20 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற கருத்தியலாகும்.
(2) அரசாட்சி முறையை ஆதரிக்கின்றது.
(3) இறைமையின் உரிமையினை ஆட்சியாளரிடம் ஒப்படைக்கின்றது.
(4) அரசின் தலைவர் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட வேண்டும் எனக் கருதுகின்றது.
(5) பிரசைகளின் அரசியல் சுதந்திரத்தை முழுமையாக நிராகரிக்கின்றது. (.....)

10. முரண்பாடு (மோதல்) தொடர்பான செயற்பாட்டுவாத வகைப்படுத்தலில் ஒன்றாக அமைவது
(1) ஆளக முரண்பாடு (2) குழுவினுள்ளான முரண்பாடு
(3) நேர்கணிய முரண்பாடு (4) அரசுகளுக்கிடையிலான முரண்பாடு
(5) அரசு நிர்மாண முரண்பாடு (.....)

- **11 தொடக்கம் 15 வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து சரியான கூற்றுத் தொகுதியினைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அடைப்புக் குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

11. 1833 ஆம் ஆண்டு கோல்புரூக் - கமரன் ஆணைக்குழுவின் சிபார்சுகள்

A - ஆளுநரின் அதிகாரங்களை அதிகரித்தல்.

B - நாட்டின் நிர்வாகத்தினை மத்தியமயப்படுத்துதல்.

C - சுயாதீன நீதித்துறையினைத் தாபித்தல்

D - சிவில் சேவையினை சீரமைத்தல்.

E - அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாதொழித்தல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (.....)

12. 1910 தொடக்கம் 1930 வரை அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களின் கீழ்

A - ஆளுநரின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன.

B - கல்வி மற்றும் சொத்தினை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட குழுவுக்கு வாக்குரிமை கிடைத்தது.

C - மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மகாணப் பிரதிநிதித்துவ முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

D - சட்டசபையின் அதிகாரங்கள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டன.

E - சட்டசபையில் உத்தியோக சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (.....)

13. 1931 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம்

A - வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை தொடர்ந்தும் பேணியது.

B - சிவில் சமூக செயற்பாடுகள் பரவலடையக் காரணமாகியது.

C - இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை இல்லாதொழித்தது.

D - மாகாண பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட்டது.

E - நிறைவேற்றுக்குழு முறையினை அறிமுகப்படுத்தியது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (.....)

14. 1947 / 1948 சோல்பரி அரசியலமைப்பின் கீழ்

A - ஈரங்க சட்டசபை தாபிக்கப்பட்டமை.

B - மந்திரி சபையில் கூட்டுப்பொறுப்புத் தத்துவம் காணப்பட்டமை.

C - மகாதேசாதிபதியின் பதிவிக்காலம் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டமை.

D - சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் காப்பீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.

E - சுயாதீன அரச சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டமை.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (.....)

PAST PAPERS WIKI

15. இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் விசேட பண்புகள்

A - ஓரங்க சட்டசபையினைத் தாபித்தமை.

B - மந்திரிசபை அரசாங்க முறையை உருவாக்கியமை.

C - அதிகார வேறாக்கத் தத்துவத்தினை அறிமுகம் செய்தமை.

D - அரசின் தலைவர் பிரதமரால் நியமிக்கப்பட்டமை.

E - சுயாதீன பொதுச் சேவையினை நிராகரித்தமை.

(1) ABCD *(2) ABCE* *(3) ABDE* *(4) ACDE* *(5) BCDE* (.....)

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

இலக்கம்	முதலாவது கூற்று	இரண்டாவது கூற்று
(1)	உண்மை	உண்மை
(2)	உண்மை	பொய்
(3)	பொய்	உண்மை
(4)	பொய்	பொய்
(5)	உண்மை	உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது

	முதலாவது கூற்று	இரண்டாவது கூற்று
16)	இலங்கையானது போர்த்துக்கல், ஒல்லாந்து மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்தது.	இலங்கையை காலனித்துவத்திற்கு உட்படுத்திய நாடுகளில் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகள் இலங்கைச் சமூகத்தின் மீது அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. (.....)
17)	கோல்புரூக் - கமரன் சிபார்சுகளின் கீழ் கட்டாய இராஜகாரிய சேவை முறை இல்லாதொழிக்கப்பட்டது.	கோல்புரூக் - கமரன் சிபார்சுகளின் கீழ் நிருவாகச் செயற்பாடுகளுக்காக நிறைவேற்றுக் கழகம் ஒன்று நிறுவப்பட்டது. (.....)
18)	டொனமூர் அரசியலமைப்பின் கீழ் சட்டசபை அரசுக்கழகம் என அழைக்கப்பட்டது.	அரசுக் கழக உறுப்பினர்கள் அனைவரும் இலங்கையர்களாகக் (சுதேசிகள்) காணப்பட்டனர். (.....)
19)	சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றம் பூரண சட்டவாக்க அதிகாரத்தைக் கொண்டிருந்தது.	சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களால் தேர்தல் மூலம் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டனர். (.....)
20)	1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவி அறிமுகப்படுத்தப்பட்டது.	1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயம் முதன்முதலில் உருவாக்கப்பட்டது. (.....)

பகுதி – I(B)

21. (1) அரசியல் எண்ணக்கருக்கள் தொடர்பாக நெறிமுறைசார் விளக்கத்தினை வழங்கும் அரசியல் அணுகுமுறை எது?

.....

(2) அரசியல் கற்கைக்கு அனுபவரீதியான பரிசீலனை முறைகளை அறிமுகம் செய்த அரசியல் அணுகுமுறை எது?

.....

22. கீழே தரப்பட்டுள்ள எண்ணக்கரு விளக்கங்களுக்குப் பொருத்தமான அமைப்புக்களை முறையே குறிப்பிடுக.

(1) அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கும் நோக்குடன் செயற்படும் பொதுமக்களின் முறைசார் ஒழுங்கமைப்பு

.....

(2) அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் பிரஜைகளின் ஒரு சுயாதீன அமைப்பு.

.....

23. (1) 'இறைமை' என்ற எண்ணக்கருவை அரசறிவியலில் முதன் முதலில் பயன்படுத்திய அறிஞர் யார்?

.....

(2) சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை முன்வைத்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சிந்தனையாளர் யார்?

.....

24. (1) அர்த்த சமஷ்டி அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தும் நாடு எது?

.....

(2) நிறைவேற்று அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப ஐக்கிய அமெரிக்காவில் காணப்படும் அரசாங்க முறை எது?

.....

25. (1) தீவிர இனவாதம் மற்றும் தீவிர இராணுவவாதத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட அரசியல் கருத்தியல் எது?

.....

(2) தேசிய அடையாளங்களைக் கடந்து ஒரே இனமாகச் சிந்திப்பதை வலியுறுத்தும் அரசியல் கருத்தியல் எது?

.....

Past Papers Wiki

26. முரண்பாடுகளை (மோதல்) பிரதானமாக மூன்று வகைப்படுத்தலாம். அவற்றுள் இரு வகைப்பாடுகளைக் குறிப்பிடுக.

(1) .....

(2) .....

27. முரண்பாட்டுத் தீர்வுச் செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் அடிப்படை ஊடகங்கள் நான்கு காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டை எழுதுக.

(1) .....

(2) .....

28. (1) இலங்கையில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

.....

(2) இலங்கையில் சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

.....

29. (1) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் உண்மை நிர்வாகியின் பதவிப் பெயரைக் குறிப்பிடுக.

.....

(2) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நாம நிர்வாகியின் பதவிப் பெயரைக் குறிப்பிடுக..

.....

30. (1) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சட்டமூலம் ஒன்றுக்கு கையொப்பமிடுவதன் மூலம் அதனை சட்டமாக்கும் அதிகாரம் யாரிடம் காணப்பட்டது?

.....

(2) 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் சட்டமூலம் ஒன்றுக்கு கையொப்பமிடுவதன் மூலம் அதனை சட்டமாக்கும் அதிகாரம் யாரிடம் காணப்பட்டது?

.....

(30 × 2 = 60 புள்ளிகள்)

பகுதி II

❖ **இந்த வினாப்பத்திரத்தில் நான்கு வினாக்கள் உள்ளன. இவற்றில் விரும்பிய இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

01. அரசியலுக்கும் அரசறிவியலுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை ஆராய்க.

i. அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாடுகள்.

ii. அமுக்கக் குழுக்களுக்கு சார்பான மற்றும் எதிரான கருத்துக்கள் / வாதங்கள்

iii. ஒப்பீட்டு அரசியல் கற்கை.

$(10 \times 2 = 20$ புள்ளிகள்)

03. i. பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் விளைவுகளை மதிப்பிடுக.

ii. சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட சிறுபான்மை இனங்களுக்கான உரிமைக் காப்பீடுகளை ஆராய்க.

$(10 \times 2 = 20$ புள்ளிகள்)

04. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.

i. அரசும் இறைமையும்

ii. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் பண்புகள்

iii. பாசிசவாதத்தின் பண்புகள்

iv. முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரம்

$(10 \times 2 = 20$ புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library